## 23. தலைப்பு 21 – கணக்காய்வாளர் தலைமை அதிபதி

### 23.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### பாதீட்டு முரண்கள்

மூன்று செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னரான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 63 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 23.2 கட்டு நிதிக் கணக்கு

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவுபெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல் நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 170,000 செயல் நிமித்த உப கட்டு நிதி செயற்பாடு நிறைவுபெற்று 1 1/2 மாதம் முதல் 6 மாத காலம் வரையிலான வீச்சில் தீர்க்கப்பட்டிருந்தது.

### 23.3 வருமானக் கணக்குகள்

திணைக்களத் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற் பொறுப்பு என்பன கையளிக்கப்பட்டிருந்தது. 20.03.02.01 ஆம் இலக்க அந்த வருமானக் குறியீட்டிற்கு (கணக்காய்வுக் கட்டணம்) உரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்கின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 189,732,373 தொகையான நிலுவை வருமானம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 214,793,613 வரை ரூபா 25,061,240 இனால் அதாவது 13.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) முப்பத்து நான்கு மாநகர சபைகளுக்கும், 19 நகர சபைகளுக்கும், 142 பிரதேச சபைகளுக்கும், 135 கூட்டுத்தாபன மற்றும் அரசாங்கம் கையேற்ற நிறுவனங்களுக்குமுரிய நிலுவைக் கணக்காய்வுக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதிலும்,

மீளாய்வாண்டின்போது அந்த நிறுவனங்களிலிருந்து நிலுவைக் கணக்காய்வுக் கட்டணத்தை அறவிடல் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற பாரியளவிலான வருமானம் கிடைக்கின்ற நிதியங்களிலிருந்து கணக்காய்வுக் கட்டணத்தை அறவிடுவதற்கான திட்டமொன்று காணப்படவில்லை.

(ஈ) அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபைகள், அரசாங்கத்தினால் கையேற்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து கணக்காய்வுக் கட்டணத்தை அறவிடுவதற்கு உரிய அமைச்சிலிருந்து இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதில் அதிக தாமதம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பெருமளவாக உள்ளதால் கணக்காய்வுக் கட்டணப் பட்டியலை விநியோகிக்கப்பதிலும் அதிக தாமதம் ஏற்பட்டிருந்தது.

**23.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---

02101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஒக்தோபர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,850,976 ஆகும்.

(ஆ) இடமாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களின் ரூபா 29,875 கூட்டுத் தொகையான கடன் மீதி நிதிப்பிரமாணம் 485(4) மற்றும் 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் இலக்க பந்திகளின் பிரகாரம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க சேவையிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களின் ரூபா 157,110 கூட்டுத் தொகையான கடன் மீதி தீர்க்கப்பட்டடிருக்கவில்லை.

(ஈ) சேவை விலகிய 12 உத்தியோகத்தர்களின் ரூபா 456,120 கூட்டுத் தொகையான கடன் மீதி தொடர்பில் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஓய்வுபெற்ற 13 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 1,406,523 கூட்டுத் தொகையான கடன் மீதி அறவிடப்படாதிருந்தது.

(ஊ) மரணமடைந்த 09 உத்தியோகத்தர்களின் ரூபா 203,052 கூட்டுத்தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) சேவை முடிவுறுத்தப்பட்ட 04 உத்தியோகத்தர்களின் ரூபா 598,296 கூட்டுத் தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**23.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்**

2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 239/2014 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் DGSA 8(i) மாதிரிப் படிவத்தின் கீழ் பொறுப்புகள் தொடர்பான கூற்றில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொறுப்புகள் சரியாகக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 960,614 கூட்டுத் தொகையான பொறுப்புகள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**23.6 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள்**

வங்கிக் கணக்கு ஒன்றில் வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த ரூபா 15,530 கூட்டுத் தொகையான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**23.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 354 | 211 | 143 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 1,214 | 798 | 416 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 178 | 141 | 32 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 181 | 137 | 44 | - |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 7 | - | 7 |
| | மொத்தம் | 1,927 | 1,294 | 635 | 7 |